[31st August 1959

* 14 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have received any representation from the potato producers of the Nilgiris district, on 4th May 1959 to exempt potatoes from the levy of sales-tax; and

(*b*) if so, the steps taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Government have examined the representation. They do not see any justification for exempting potatoes from the levy of sales-tax. The Government have informed the potato growers of Nilgiris district accordingly.

Sri K. SATTANATHA KARAYALAR : ஸார், அழுகும் பொருள்களில் 30 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனை செய்பவர்களுக்குத்தான் வரி போடப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது நான்–அஸெஸிகளிட மிருந்தும் வரிகள் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அவ்விதம் வரி கேட்பது முறையல்ல என்று சர்க்கார் ஏதாவது உத்தரவு பிறப்பித் திருக்கிறார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நம்முடைய சட்டத்தில் 30 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக வியாபாரம் இருக்கின்றவர்களுக்குத்தான் வரி போடவேண்டும் என்று கண்டிருக்கிறது. இது சம்பந்தமாக இன்கம் டாக்ஸ் கணக்கு வைத்திருக்கின்றவர்களிடமிருந்து இதைக் கணக்கெடுத்துக் கொண்டு அவர்களிடம் மட்டும் வரி கேட்க வேண்டும் என்று எக்ஸிக்யூடிவ் இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் இப்போது நடை முறையிலும் இருந்துகொண்டிருக்கிறது.

Sri J. MATHA GOWDER : ஸார், உருளைக்கிழங்கு உணவுப்பொருள் என்ற முறையில் இப்பொழுது வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி உருளைக்கிழங்கை அழுகும் பொருளாகக் கருதி அழுகும் பொருளுக்கு விதிககப்பட்டிருக்கும் வரியைப்போன்று இதற்கும் விதிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இப்போதுதான் இந்த சட்டசபை நன்றாகப் பரிசீலனை செய்து ஆலோசனை செய்து வெஜிடபிள் போன்றவை களுக்கு ஒரு சதமானமும், மற்றப்படி உருளைக்கிழங்கு போன்றவைகளுக்கு இரண்டு சதமானமும் போட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆகவே இப்போது அதை மாற்றுவதற்கு உத்தேசம் இல்லை.

Srimathi T. N. ANANDANAYAKI : ஆட்டு இறைச்சிக்கு விற்பனை செய்யும் இடத்தில் போடப்பட்டிருக்கும் வரியை வெட்டும் இடத்திலேயே போட வேண்டும் என்று வியாபாரிகள் கேட்டிருந்தார்கள். அதைப்பற்றி அரசாங்கம் என்ன ஆலோசனை நடத்தியது ?

The Hon. Sri R. VENKATARAMAN : **I am grateful to the hon. member for this question.** எந்தெந்த இடத்தில் சர்க்கார் போட வேண்டுமென்று நிச்சயித்திருக்கிறார்களோ அதை மாற்றி வேறு இடத்தில் போட்டுவிடுங்கள் என்று பாதிக்கப்பட்ட வியாபாரிகள் மனு கொடுக்கிறார் கள். அதன்படிச் செய்துகொண்டிருந்தால் எல்லோரையும் திருப்தி செய்ய முடியாது. அந்த முறையில்தான் இருக்கிறது, கனம் அங்கத் தினர் அவர்களுடைய கேள்வியும். சாதாரணமாக ஒரு முனை வரியை ஆரம்ப இடத்தில் அதாவது உற்பத்தி செய்கின்ற இடத்தில் போடுகின்றோம். பல முனை வரியை விற்பனை செய்கின்ற இடத்தில் போடுகிறோம். இவ்விதம் இருந்தால் ஜனங்களுக்குக் குறைவான கஷ்டமுள்ளதாக இருக்கும். அதல்லாமல் பல முனை வரிகளை ஆரம்ப இடத்திலேயே அல்லது உற்பத்தி செய்கின்ற இடத்திலேயே பேடுவாதாக

31st August 1959]

இருந்தால் அதனுல் ஜனங்களுக்கும் பெரிய கஷ்டங்கள் ஏற்படும். மேலும் அட்மினிஸ்ட்ரேட்டிவ் கஷ்டங்களும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMI : ஸார், அழுகும் பொருள்கள் மீது இரண்டு சதமானம் என்று போட்டிருப்பதை மாற்றி இப்போது ஒரு சதமானம் என்று போடப்பட்டிருக்கிறது. அதையும் குறைக்க வேண்டும் என்று மாகாண வியாபாரிகள் கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இதை அரசாங்கம் பரிசீலனை செய்து இன்னும் ஆறு மாதம் கழித்தாவது இதையும் குறைப் பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சாதாரணமாக வரி கொடுப்பது என்பதே எல்லோருக்கும் கஷ்டம்தான். எனக்கும் கூட கஷ்டமாகத் தான் இருக்கிறது. ஆனுல் வரிகளை யார் யாரால் கொடுக்க முடியும் என்ப தைப்பற்றியும் அவ்விதம் கொடுப்பது நியாயமா இல்லையா என்பதைப் பற்றியும் சட்டசபைதான் ஆலோசனை செய்ய வேண்டும். அவ்விதம் ஆலோசனை செய்துதான் வரிகளைப் போட்டிருக்கிறேம். அதை இப்போது மாற்றுவது என்பது அவ்வளவு சரியல்ல.

SRI S. M. ANNAMALAI : ஸார், உருளைக்கிழங்குகளை பிற மாகா ணங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றவர்களுக்கு வரி கிடையாது என்றும், அதை வெட்டி எடுக்கின்றவர்கள்தான் அதிகமாக வரி கொடுக்கவேண்டி இருக்கிறது என்றும் சொல்லுகிருர்களே, அதன் உண்மை நிலை என்ன?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது நாம் விதித்திருக் கின்ற முறைகளை எடுத்துக்கொண்டால், at the point of first purchase, என்ற முறையில் முதலாவது யார் வாங்குகிருர்களோ அவர்கள்தான் வரியைக் கொடுக்கிருர்கள் உருளைக்கிழங்கைப் பொறுத்தவரையில். உற்பத்தி செய்கிறவர்கள் கொடுப்பதில்லை. உருளைக்கிழங்கு அதிகமாக உற் பத்தி செய்யப்படும் நீலகிரி ஜில்லாவில் முதலாவதாக உற்பத்தி செய்கிற வர்களிடமிருந்து வரியை தவருக வசூல் செய்து வந்தார்கள். இந்த விபரத்தை அறிந்தவுடன் இதை மாற்றி அங்கு உருளைக்கிழங்குகளை வாங்கு கின்ற "பொட்டட்டோ மார்க்கட்டிங் ஸொஸைட்டி" தான் இந்த வரியைக் கொடுக்க வேண்டும் என்று இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கப்பட்டது. அதே போன்றுதான் முதலாவது வாங்குகின்ற பெரிய வியாபாரிகள்தான் இந்த வரியைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதனுல் உற்பத்தி செய்கின்றவர் களுக்கு எத்தவிதமான பாதகமும் இல்லை. மேலும் அங்கத்தினர் அவர்கள் கேட்ட இன்னொரு கேள்வி வெளி இடங்களுக்கு உருளைக்கிழங்கை அனுப்புகிறவர்களுக்குப் போடப்பட்டிருக்கும் வரியைப் பற்றியது. இது ஸென்ட்ரல் ஸேல்ஸ் டாக்ஸ் பிரகாரம் ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு அனுப்ப வேண்டும் என்றுல், "ஆதரைஸ்ட் டீலர்"கள் தான் அனுப்ப வேண்டும் என்றும், அதற்கு ஸி. பாரம் சர்டிபிகேட் வாங்க வேண்டும் என்றும், அவ்விதம் வாங்காதவர்கள் 7 சதமானம் டாக்ஸ் கொடுக்க வேண்டும் என்றும் இருந்தது. அதை இப்போது மாற்றி இப் போது வெளியிடங்களுக்கு அனுப்ப வேண்டுமென்றுல் இரண்டு சதமானம் டாக்ஸ் கொடுக்க வேண்டும் என்றும் சர்க்கார் நிர்ணயம் செய்து அதற்கு வேண்டிய உத்தரவையும் பிறப்பித்திருக்கிருர்கள் என்பதைத் தெரிவித் துக்கொள்ளுகிறேன்.

Ports

* 15 Q.—SRI N. S. RAMALINGAM (on behalf of SRI M. S. SELVARAJAN) : Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have recommended to the Central Government to take up the Tuticorin Harbour Development work during the Second Plan period itself?

THE HON. SRI P. KAKKAN : Yes, Sir.